ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2441/17 - 2025 ජුනි මස 18 වැනි බදාදා - 2025.06.18

*2441/17 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழங்கங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட GL 24 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிடெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதும் அதன் சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதுமான பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்ற தாக இல. 239, அரசடி, வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணக் கிளை) அமைந்துள்ள ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) (பிறைவேட்) லிமிடெட்டின் கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனை பட்டம் அளிக்கின்ற கிளையொன்றாக ஏற்றங்கீகரிக்கின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிடெட் - யாழ்ப்பாணக் கிளை ஆனது, இக்கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

2. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிடெட் - யாழ்ப்பாணக் கிளை ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை இல. 239, அரசடி, வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் மாத்திரமே நடாத்துதல் வேண்டும்.

3. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிடெட் - யாழ்ப்பாணக் கிளை ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினால் அது தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

4. ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிடெட்டின் - யாழ்ப்பாணக் கிளையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்காக விதித்துரைக்கப்பட்ட தகைமைகளை பூரணப்படுத்தலின் மேல், கல்விசார் நடவடிக்கைகளின் முறையான நடாத்துகை மற்றும் இதற்கான அடடவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சியின் வழங்குகைக்கான பொறுப்புடைமையானது ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (உத்தரவாதம்) லிமிடெட், மாலபே இல் முழுமையாக தங்கியுள்ளது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| தகவல் தொழினுட்பத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) | பீஎஸ்சீ சிறப்பு (தகவல் தொழினுட்பம்) |
| வணிக நிருவாகத்தில் இளமாணி சிறப்பு | பீபீஏ சிறப்பு |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய**,
கல்வி, உயர்கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, யூன் 12.

EOG 06 - 0133